# தாம் விரும்பிய பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பமுடியாது

## புதிய திட்டம் வற்புறுத்தும்

— நமது விசேஷ நிருபர் —

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை பாடசாலைகள் புனரமைப்புத் திட்டம் பற்றிய ஆலோசனை தற்பொழுது படிப்படியாக எல்லாவிடங்களிலும் நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

இதுசம்பந்தமான திட்டத்தை உருவாக்குவதற்கு கல்வி அமைச்சு மூன்றுவது முறையாக முயற்சி செய்துள்ளது.

இப்புதியதிட்டத்தின்பிரகாரம் பாடசாலைகள் ஆரம்ப, கனிஷ்ட பிரிவுகளாகப்பிரிக்கப்படுமெனவும், பெற்றோர்கள் குறிப்பிட்ட ஒரு பாடசாலைக்கே பிள்ளைகளை அனுப்ப நிர்ப்பந்திக்கப்படுவார்களெனவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் புனரமைப்பு பற்றி யாழ். வித்தியாதிபதி

(6-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 9
இதழ் 314

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 27 றஜப். 8 வெள்ளிக்கிழமை [13-10-67]

# யாழ்ப்பாண மாவட்டத்தின் சாதனை

# 1 வருடத்தில் ரூ. 5 லட்சம் சிரமதான வேலை

## 55,771 தொண்டர்கள் ஆற்றிய பணி

— நமது நிருபர் எஸ். திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்.மாவட்டத்தில் கடந்த பதினுன்கு மாதங்களிலும் சுமார் 4 லட்சத்து 76 ஆயிரத்து 620 ரூபா பெறுமதியான வேலைகள் சிரமதானம் மூலம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச்சிரமதான வேலைகளில் மொத்தம் 55,771 பேர் கலந்துகொண்டதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

[6-ம் பக்கம்பார்க்க]

## பொலிஸார் நடத்திய திடீர் சோதனை

### ரூபா 40,000 பொருட்கள் கந்தர்மடத்தில் சிக்கின

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தர்மடத்தில் 40,000 ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரிடம் நேற்று மாலை சிக்கின. தண்ணீரும், குரு மண்ணும் ஒட்டி, உடைக்கப்படாமல் பார்சலாக இருந்தநிலையில் இப்பொருட்களை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தியாவிலிந்து கடத்திவரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பிளாஸ்டிக் காப்புகள், 'ரை'கள், கைக்கடிகாரப் பட்டிகள், பவுண்டன் பேனுக்கள் உட்பட அநேக பொருட்கள் இப்பார்சல்களில் இருந்தனவாம்.

'சம்பந்தப்பட்ட வீட்டை உடன் சோதனையிடுங்கள்' என பொலிசாருக்குக் கிடைத்த ஒரு இரகசியத் தகவலைத் தொடர்ந்து வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியினர் கந்தர்மடத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து இப்பொருட்களைக் கைப்பற்றினர். உதவி பொலிஸ் சுப்பிகண்டன்கள் திரு. ஆர். சி. தவராசா, திரு. வீரசிங்கா, சப் இன்ஸ்பெக்டர் திரு. சமரக்கோன், இரகசிய பொலிஸ் பகுதி சார்ஜண்ட் திரு. பொன்னுத்துரை உட்பட அநேக பொலிஸார் இக்கோஷ்டியில் சென்றிருந்தனர்.

இது சம்பந்தமாக மூவர் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பொருட்கள் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன. புலன்விசாரணை நடைபெறுகின்றது. [ந. நி]

யாழ்ப்பாணத்தில்

## கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி கூட்டும் மகாநாடு

### தமிழரசுக் கட்சி எம். பி. க்களின் புகார்கள் ஆராயப்படும்

குரும்பசிட்டி, வியா.

உத்தியோக ரீதியில் 17-ந் திகதி யாழ். நகர் விஜயம் செய்கின்ற கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. பெரேரா, மாகாண வித்தியாதிபதியுடனும் மற்றும் உயர்தர அதிகாரிகளுடனும் கல்வி சம்பந்தமாக மகாநாடு ஒன்றினை நடாத்துவார். இம் மகாநாட்டில் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் காலி ஸ்தானங்கள்நிரப்புதல் விஞ்ஞான கட்டிடவசதிகள், உபகரணங்கள் தட்டுப்பாடு ஆகியன பற்றி தமிழரசுக்கட்சி எம். பி. க்கள். கல்வி மந்திரிக்கு செய்துள்ள புகார்கள் குறித்து ஆராயப்படும் எனத் தெரிகிறது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு

38 Q 0497 ரூபா 100,000

2-ம் பரிசு

57 P 0964 ரூபா 40,000

3-ம் பரிசு

34 J 0324 ரூபா 10,000

தலா ரூபா 1562-60சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 19 H 0936 | 03 J 0858 |
| 09 A 0862 | 05 A 0409 |
| 58 N 0781 | 39 L 0292 |
| 41 F 0228 | 04 U 0313 |
| 38 N 0751 | 07 Q 0729 |

[6-ம் பக்கம் பார்க்க]

## "பெண் வர்க்கம் என்னை வஞ்சித்துவிட்டது"

### தற்கொலை செய்த தந்தை எழுதிய இறுதிக் கடிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பெண் வர்க்கத்தாரால் தான் வஞ்சிக்கப்பட்டதால் உயிர்வாழ விரும்பவில்லையெனக் கடிதம் எழுதி வைத்துவிட்டு நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மீராசாகிப் தௌபீக் [35 வயது] என்ற நபர். இப்பரிதாப சம்பவம் யாழ்ப்பாணம்ஆஸாத் வீதியில் நடைபெற்றது.

இம்மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்னம் நடத்திய மரணவிசாரணையின் போது இறந்தவர் எழுதியதாகக் குறிப்பிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

அக்கடிதத்தில் "என் வாழ்க்கையில் பெண் வர்க்கத்தார் அத்தனை பேரும் வஞ்சகம்செய்ததால்எனக்கு உயிருடன் இருக்க விருப்பமில்லை. எனக்குத் துரோகம் செய்தவர்கள் நன்றாக வாழட்டும். கடவுளும் எனக்கு எதிரிதான். எல்லோருடைய வெறுப்பையும் எதிர்த்தும் வாழ முடியவில்லை" என எழுதப்பட்டிருந்தது.

இறந்தவருக்கு 4 பிள்ளை

[6-ம் பக்கம் பார்க்க]

## மரவரிமுறையை நீக்க சிபார்சு

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் மரவரி முறையை நீக்குவதற்கு, வரி விசாரணை கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

அரசாங்கத்திற்கு வரி விசாரணை கமிஷன் செய்துள்ள சிபார்சுகளில்இதுவும்ஒன்று.

## தாக்குதல் வழக்கில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் வி. கே. கந்தையாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தாக்குதல் வழக்கை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் அவரை சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்,

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. மொகமட் ஜமீல் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் 6-ம் திகதி கைதடியைச்சேர்ந்த அப்புத்துரை யோகலிங்கம் என்பவரை பலாத்காரமாகத் தாக்கியதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் கந்தையா மீது யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இன்னுமொரு தாக்குதல் வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. [ந.நி.

## விமானம் நொருங்கியது 60 பேர் பலி

லண்டன், அக். 13

பிரிட்டன் பிரயாணிகள் விமானம் நேற்று மாலை விழுந்து நொருங்கியது. லண்டனிலிருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் பிரயாணம் செய்த சுமார் 60 பேர் உயிரிழந்தனரென நம்பப்படுகிறது.

இவ்விபத்தில் எவரும் உயிர் தப்பியதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உலகம் என்னுடைய இல்லம். மனித சமுதாயமே என்னுடைய தோழன். பிறர்க்கு நன்மை செய்வதே என்னுடைய மதம். என் மனமே என்னுடைய கோயில்.

— தாமஸ் பெயின்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ புரட்டாதி ௴ 27௳ 13-10-67

## சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம்

மலாயாவிலிருந்து திரும்பியதும் பிரதமர் டட்லி சேனநாயகா பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிவித்தார். மலேசியாவின் துரிதமான முன்னேற்றத்துக்குக் காரணம் அங்குள்ள சமூக சமரசமும் ஒற்றுமையும் தானென்றும், இலங்கையின் வளர்ச்சிக்கு இங்கு நிலவும் வேற்றுமைகள் தடையாக இருந்துவருவதாகவும் சரியாகச் சொன்னார்.

இங்கு சமூக ஒற்றுமையின் முக்கியத்தை பிரதமர் வற்புறுத்துவது இது முதல் தடவையல்ல. தமிழ்ப் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொண்டு தேசிய அரசாங்கத்தை அவர் அமைத்த போதே இவ்விஷயத்தை வற்புறுத்தியுள்ளார். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின், இலங்கையில் தமிழரின் பீதியும் அவநம்பிக்கையும் குறைந்துள்ளது மெய்தான். என்றாலும் ஜனநாயகநாடான இலங்கையில், சிறுபான்மைச்சமூகங்களுக்கு அடிப்படையான ஒரு பெரிய குறை, பார்லிமெண்ட் சபையில் தங்களுக்குநியாயமாக கிடைக்கவேண்டிய பிரதிநிதித்துவமும் கூட இல்லை என்பதுதான்.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது பெரும்பான்மை சமூகத்தின் ஆட்சியாக இருந்து சிறுபான்மை சமூகங்களின் அரசியல் முதலிய உரிமைகள் எப்படி இங்கு பறிக்கப்பட்டன வென்பதை பிரதமரும் மற்ற தேசாபிமானிகளும் சற்றே சிந்தித்துப்பார்க்க வேண்டும். இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்கு முன்பாகவும் பின்னர் சுமார் 7 வருடகாலமும் இங்கு தமிழும் ஓர் அரசாங்க மொழியாக இருந்து வந்தது. ஆனால் பெரிய பண்டார நாயக்கா பிரதமரானதும், தமிழ்மொழிக்கு அந்த மதிப்பைப் பறித்துவிட்டனர். தனிச்சிங்கள மசோதாவை, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த சிங்களவரும்சற்றும் கூச்சமில்லாமல் ஆதரித்து நிறைவேற்றினர். இடதுசாரிக் கட்சிகளைத் தவிர, மற்ற சிங்களவரெல்லாரும், கட்சிபேதங்களை மறந்து, தமிழரின் உயிர் போன்ற இந்த உரிமைமையைம் பறித்ததைக் கண்டபின் இந்த ஜனநாயகமுறையில் தமிழருக்கு எவ்விதம் நம்பிக்கை இருக்கமுடியும்?

மேலும் பார்லிமெண்ட் சபையிலே மலைநாட்டில் வசிக்கும் சுமார் பத்து லட்சம் தமிழருக்கு 14 பிரதிநிதிகள் இருப்பரென்று சோல்பரி அரசியல்திட்டம் கூறுகையில் அவர்களது வாக்குரிமையை ஒரே அடியில் பறித்து, அவர்களுக்கு சபையில் ஒரு பிரதிநிதி கூட இல்லாமல் செய்துவிட்டனர். இப்போதும் கூட அவர்களுக்கு இரு நியமன ஸ்தானங்கள் தான் பிரதமரின் தயவால் கிடைத்துள்ளன. இத்தமிழ் மக்களின் 14 பிரதிநிதிகள் சபையில் இருந்திருப்பின் தமிழ் மொழியின் உரிமை பாதுகாக்கப்பட்டிருக்கலாம். மலைநாட்டுத் தமிழரின் அரசியல் வாக்குரிமையைப் பறித்ததுடன், அவர்களது ஜனத்தொகைக்கு உரிய பிரதிநிதிஸ்தானங்களை பெரும்பான்மைச் சமூகத்தவரே வகிக்கின்றனர். இது ஜனநாயக் நீதியென்று பிரதமரின் மனச்சாட்சியும்ஒப்புமா?

சிறுபான்மை வகுப்பினரின் ஒத்துழைப்பைப் பெற உண்மையில் ஆவலுள்ளவர்கள் இவ்வித அநீதிகளை நீடிக்க முடியாது. உடனடியாக அந்த அநீதிகளை முற்றாக நீக்க முடியாவிடினும் கூடுமானவரை படிப்படியாக நீக்க வேண்டும். அதற்கு இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் பிரதமருக்குக் கிடைத்துள்ளது. செனட் சபையிலே பத்து ஸ்தானங்கள் காலியாகின்றன. இவற்றில் பல ஸ்தானங்களை சிறுபான்மைச் சமூகங்களுக்கு அளிப்பதன் மூலம் இக்குறையை நீக்க அவருக்குள்ள உண்மை ஆர்வத்தைக் காட்டலாம். இதற்கு பலத்த எதிர்ப்பு அவரது கட்சியிலேயே எழக்கூடும். சிறுபான்மைத் தமிழரின் குறைகளைத் தீர்க்க தெற்கிலிருந்து பல தலைவர்களும் ஆவலுடன் இங்கு வரும் இச்சமயத்தில் செனட்சபையில் சிறுபான்மைத் தமிழருக்கு இரண்டு அல்லது மூன்று ஸ்தானங்களை அளிக்க, பிரதமர் உள்ளிட்டுப் பல கட்சித்தலைவர்களும் ஏன் முன்வரக் கூடாது?

பார்லிமெண்டிலோ, செனட்சபையிலோ சிறுபான்மைத் தமிழர்இன்று ஒரு ஸ்தானம்கூட வகிக்கவில்லை. இது பெரியகுறை மட்டுமல்ல, பெரிய அநீதியுமாகும். இந்தியாவில் ஹரிஜனங்களுக்கு அவர்களது ஜனத்தொகை விதாசாரத்தை தவிட அதிக ஸ்தானங்களை ஒதுக்கியுள்ளனர். அவ்விதம் இங்கும்சட்டமூலம் செய்வதன் மூலமே சிறுபான்மைத் தமிழரின் இன்னல்களை நீக்குவதாகவும், அவர்களிடத்தில் உண்மையான அனுதாபம் உள்ளதென்பதைக் காட்டுவதாகவுமிருக்கும். சிறுபான்மைச் சமூகங்களின் ஒத்துழைப்பைப் பெற்று நாடு முன்னேற இதுவே சரியான வழி.

## விஞ்ஞானிகளும் ஏற்கின்றனர்

புன்னாலைக்கட்டுவன், வியா.

''ஒருகாலத்தில் பொருள் முதல் வாதத்தை ஏற்றுக் கொண்டிருந்த மேலைத்தேச விஞ்ஞானிகளும், தமது அணுசக்தி ஆராய்ச்சிகளின் பின்னர், கண்ணுற் காணாத சக்தி ஒன்றிருப்பதை இன்று ஒப்புக்கொள்ளுகின்றனர்''.

இவ்வாறு 'சைவப் பெரியார்' திரு. எம்.வைரமுத்து உரும்பராய் இந்துக்கல்லூரி கலைமகள் விழாவில் உரையாற்றுகையிற் கூறினர்.

தொண்டமானாற்றுக்கு

# விரைவில் குடிநீர் விநியோகத் திட்டம்

### உள்ளூராட்சி அமைச்சர் தகவல்

வல்வெட்டித்துறை, வியா.

''இப்பகுதி மக்கள் குடிப்பதற்கு நன்னீரில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதை நன்கு அறிவேன். இக்கிணற்று நீர் சம்பந்தமான நிபுணர்களின் ஆராய்ச்சி விரைவில் நடைபெறும். ஆராய்ச்சி முடிவடைந்ததும் குடிநீர் விநியோகத்தையும், விவசாய அபிவிருத்தி சம்பந்தமான அலுவல்களையும் விரைவில் நிறைவேற்றித் தருவேன்.''

தொண்டமானாறு நன்னீர்க் கிணற்றைப் பார்வையிட்ட பின்னர் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர். அமைச்சர் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினத்தின் அழைப்பை ஏற்று இவற்றைப் பார்வையிட்டுச் சென்றார்.

அமைச்சருடன் பருத்தித்துறை எம். பி., உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், திரு. பத்மநாதன், என்ஜினியர் திரு. புவனேந்திரம் ஆகியோரும் விஜயம் செய்தனர்

## ''பணிஸ்'' இல்லை

### கரணவாய் பாடசாலையில்

உடுப்பிட்டி, வியாழன்

கரணவாய் தெற்கு மணியகாரன்தோட்டம் சைவப் பாடசாலையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் இதுவரை காலமும் பாடசாலைப் பிள்ளைகளுக்கென மதிய நேரத்தில் வழங்கப்பட்டு வந்த ''பணிஸ்'' திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

## இன்று விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கானை கொலை முயற்சி வழக்கு இன்று காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்படும். நேற்று நடைபெறவிருந்த இவ்வழக்கு எதிரி தரப்பு வழக்கறிஞரின் சுகவீனம் காரணத்தால் இன்று காலைவரை ஒத்தி வைக்கப்பட்டது. [ந.நி]

# 'புனரமைப்பு ஏழை மாணவரைப் பாதிக்கும்'

புன்னாலைக்கட்டுவன், வியா.

''புனரமைப்பின் மூலம் தமிழ்ப் பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைத் தராதரத்துக்கு இறக்கப்படுவதால் வசதிச் சம்பளம் கொடுத்துப் படிக்க இயலாத ஏழை மாணவரின் கல்வித்தரம் மேலும் பாதிக்கப்படும்.''

இக்கருத்தை நேற்று நடந்த உரும்பராய் இந்துக் கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்ட வருடாந்தக் கூட்டத்தில் ஓர் ஆசிரியர் வெளியிட்டபோது காரசாரமான விவாதம் ஏற்பட்டது. எனினும் இறுதியில் இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. கல்லூரி அதிபர் திரு. ஏ. வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. கே. நவரத்தினம் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

நடக்கவிருக்கும் புனரமைப்புப்பற்றி திரு. நவரத்தினம் விளக்குகையில், கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டே சகல மாற்றங்களும் நிகழவிருக்கின்றனவென்றும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டோர் ஆதரிக்க வேண்டுமென்றும் கூறினார்.

## இன்றைய பலன்

13-10-67

வெள்ளிக்கிழமை

(புரட்டாதி மாதம் 27௳)

நட்சத்திரம்- அவிட்டம்
திதி - தசமி பகல் 9-45 மேல் ஏகாதசி
சுபநேரம்- 6-02—7-32
ராகுகாலம் - 10-32 — 12-02

மேஷம்- ஏகாந்த சிந்தை, ஊக்கமின்மை.
ரிஷபம்- அரச எண்ணம், சமயப்பற்று.
மிதுனம்- எதையும் தாங்கும், இதயம் வேண்டும்.
கடகம்- நடுநிலைக் கொள்கை, நல்ல முடிவு.
சிம்மம் - இடையில் தடை, இறுதியில் வெற்றி.
கன்னி- புதினம் கேட்பீர், புதுமையில் நாட்டம்.
துலாம்- தாராள சிந்தை, தனமும் சேரும்.
விருச்சிகம் - கைத்தொழில் விருத்தி, காரிய ஜெயம்.
தனுசு- புதுச் செய்தி வரும், புரட்சியுமுண்டு.
மகரம்- நூதனரோகம், தாமதகுணம்.
கும்பம்- நற்செய்தி கேட்டல், நிம்மதி கிடைக்கும்.
மீனம்- சகோதர நலன், சாந்த குணம்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## கலைவிழா

குரும்பசிட்டி, வியா.

வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தினரின் வருடாந்த கலைவிழா, கீரிமலை நகுலேஸ்வரா சனசமூகநிலையத்திற்கு அருகாமையில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாரெனவும் தெரிகிறது.

## மன்னாரில் இலங்கை வங்கிக்கிளை

மன்னார், வியாழன்

மன்னாரில் இலங்கை வங்கியின் புதிய கிளையொன்று திறக்கப்பட்டுள்ளது.

இத்திறப்புவிழா வைபவத்தின்போது மன்னார் அரசாங்கஅதிபர் திருடி. நேசையா, காரியாதிகாரி மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். வங்கியின் புதிய மனேஜராக திரு. பி. சின்னத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் அடிக்கடி திடுக்கிடும் செய்திகளை வெளியிடுவது வழக்கம். அல்லாவிட்டால் அவர்கள் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் ஆக மாட்டார்களல்லவா?

இந்திய விஞ்ஞானி ஒருவர் சமீபத்தில் வெளியிட்ட செய்தி நம்மைப் போல சாதாரண மக்களை மட்டுமல்ல அவருடைய சகவிஞ்ஞானிகளையே திடுக்குறச் செய்திருக்கும். சில ஆயிரம் இந்தியர்கள் சுக்கிரன் என்ற வெள்ளிக் கிரகத்தில் இப்பொழுது வழ்ந்து வருகிறார்கள் என்று இவர் ஒரு பெரிய குண்டை தூக்கிப் போட்டு எல்லோரையும் மாரடைப்புக்குள்ளாகி விட்டார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்து நதி வெளியில், மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா நகரத்தில் வாழ்ந்த மக்கள், வான வெளி பிரயாணத்தில் வல்லவர்கள் என்றும் அங்கே ஓர் ஊழி காலக் குழப்பம் ஏற்பட்ட போது இவர்களில் சிலர் வானவெளிக் கப்பல்களில் தப்பியோடிப் போய் வெள்ளிக் கிரகத்தில் இப்பொழுதும் வாழ்ந்து வருகிறார்கள் என்றும்கூறுகிறார், இநத இந்திய விஞ்ஞானி.

இந்த செய்தியின் உண்மை, பொய்யை இதர விஞ்ஞானிகள் விசாரித்து வாக்குவாதம் செய்து மண்டை உடைபடட்டும். இதில் நமக்கென்ன கவலை.

அதுபோக, இந்தவெள்ளிக் கிரகம் எங்கேயிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? நாளை விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்து கிழக்கு வானத்தைப்பாருங்கள். நீங்கள் அதைக் காணமல் இருக்க முடியாது. நாலாம் பிறை சந்திரனின் பிரகாசத்தோடு சுக்கிர பகவான் ஜொலித்துக் கொண்டிருப்பார். இவரை 'விடிவெள்ளி' என்று கிராமவாசிகள் கூறுவார்கள். அதாவது விடியற்காலை உதிக்கும் வெள்ளி. ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்கள், கிரகங்கள், தாரகைகள் எல்லாவற்றையுமே நாங்கள் 'வெள்ளி' என்றே குறிப்பிடுகிறோம்.

'விடிவெள்ளி' எப்பொழுதுமே விடிவெள்ளியாயிருப்பதில்லை. அவர் இனிமேல் சூரியன் உதிப்பதற்குப் படிப்படியாக முன்னதாகவே உதித்து, அப்படியே பகல் நேரத்தில் வான வெளியைத் தாண்டி, இன்னும் சில மாதங்களில் சூரியன் அஸ்தமித்த பின்பு மாலை வெள்ளியாகக் காட்சியளிப்பார்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் அடுத்த படியாக வானில் தோன்றும் பிரகாசமான தாரகை, சுக்கிரன் தான். சூரிய சந்திரருக்கு அடுத்தாற் போல நமது நிழல் நிலத்தில் தெரியும் படி செய்வது இவர் ஒருவரே. ஒரு மத்தியான நேரத்திலும் கூர்ந்து கவனித்தால் ஒரு குண்டூசி முனைபோல் இவர் ஒளிவிட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

நிற்க, பூமியிலிருந்து புறப்பட்டு சுக்கிரனில் குடியேறும் வல்லமை வாய்ந்த இந்தியர்கள் அந்த லோகத்துக்குச் சென்ற பின்பு தங்கள் தாய்நாட்டை ஒரு தடவையாவது பார்ப்பதற்கு இதுவரை ஏன் நினைக்கவில்லை என்று அந்த விஞ்ஞானியைக் கேட்டால் என்ன பதில் சொல்வாரோ?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு பெல்கிரேடில் மாபெரும் வரவேற்பு

## டிட்டோவுடன் பேச்சுவார்த்தைகள்

பெல்கிரேட், ஒக். 12

யூகோஸ்லாவியாவில் விஜயம் செய்துகொண்டிருக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோவும், மேற்கு ஆசியா, வியட்னும் உட்படப் பல சர்வதேசப் பிரச்னைகளை விவாதித்தனர்.



நேற்று மாலை, இந்தியப் பிரதமருக்கு பெல்கிரேட் நகரசபை அளித்த விருந்து பசாரம் ஒன்றில் பேசுகையில், இஸ்ரேல் துருப்புகளின் தாக்குதல்களினுலேயே மேற்கு ஆசியப் பிரச்னை. இன்னும் தீர்வு காண முடியாதவொன்ருக இருப்பதாக ஜனாதிபதி டிட்டோ கூறினுர்.

**அரபு நாடுகள் நிலை பற்றி டிட்டோ**

ஆக்கிரமிப்பின் மூலம் தனக்குக் கிடைத்ததை வைத்துக் கொள்ள இஸ்ரேல் அனுமதிக்கப்பட்டால் தமது பிரச்னையைத் தீர்க்க, அரபு நாடுகள், வேறு வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்படும் என்றும் டிட்டோ எச்சரித்தார்.

கடந்த ஜூன் மாதம், அரபு நாடுகள் மீது இஸ்ரேல் தொடுத்த போரானது, அந்நாடுகளின் பொருளாதார, அரசியல் முன்னேற்றத்தின் மீது தொடுக்கப்பட்டது மட்டுமன்றி, கூட்டுச் சேராக் கொள்கை மீதும் தொடுக்கப்பட்டதாகும் என்று டிட்டோ மேலும் தெரிவித்தார்.

பிரதமர் இந்திரா காந்தி பேசுகையில், உலக சமாதானம் ஒரு நூலிழையில் தொங்குவதாகக் குறிப்பிட்டார்.

அணு ஆயுத பரவலைத் தடுக்க நடவடிக்கைகள் ஆலோசிக்கப்படும் அதே நேரத்தில், சில நாடுகள் அணு ஆயுதப் போட்டியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன என்று திருமதி இந்திரா காந்தி கூறினுர்.


குடியேற்ற வாதமும் உலகத்தைக் கூறுபோட முயல்வதாகவும் அவர் கூறினுர்.

**பெல்கிரேடில் வரவேற்பு**

முன்னதாக, இந்தியப் பிரதமர் நேற்றுக்காலை பெல்கிரேட் விமான நிலையத்தில் வந்திறங்கியதும், அங்கு குழுமியிருந்த மக்கள் பெரும் ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர்.

ஜனாதிபதி டிட்டோ, வழமையான வரவேற்பு முறையை முறித்துக் கொண்டு, தாமே நேரில் சென்று திருமதி காந்தியை வரவேற்ருர்.

மாலையில், பிரதமர் இந்திரா காந்திக்கு, பெல்கிரேட் நகரசபை வரவேற்பு அளித்தது. நகர மேயர், திருமதி இந்திரா காந்தியை, 'யூகோஸ்லாவியாவின் சிறந்த நண்பர்' எனப் பாராட்டினுர். திருமதி நந்திரா காந்தி, நன்றி தெரிவித்தார்.



ஜனாதிபதி டிட்டோ

# சூயஸ் கால்வாய் பற்றி இஸ்ரேல் எச்சரிக்கை

நியுயோர்க், ஒக். 13

சூயஸ்கால்வாயை மீண்டும் கப்பல் போக்குவரத்துக்குத் திறப்பது, ஐக்கிய அரபுக் குடியரசின் அங்கீகாரத்தில் எவ்வளவு தூரம் பொறுத்துள்ளதோ, அவ்வளவு தூரம் இஸ்ரேலின் அங்கீகாரத்திலும், பொறுத்துள்ளது என இஸ்ரேல், கப்பல் வர்த்தக நாடுகளை எச்சரித்துள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் நேற்றும்பேசுகையில், இஸ்ரேல் பிரதிநிதி திரு பிகின்ஸ் சூயஸ்கால்வாயில் இஸ்ரேல் கப்பல்கள் அனுமதிக்கப்பட்டால்தான், அங்கு சுதந்திரமான கப்பல் போக்குவரத்து நடைபெற முடியுமெனத் தெரிவித்தார்.

இதையிட்டு ஐ.நா. எடுக்கும் வேறெந்த முடிவும், இஸ்ரேலைக் கட்டுப்படுத்த முடியாதெனவும் அவர் மேலும் கூறினுர்.

# ஐ.அ.கு. விமானமொன்றை இஸ்ரேல் சுட்டு வீழ்த்தியது

சினய் பகுதியில், இரண்டு ஐ.அ.கு. 'மிக்' விமானங்கள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றதாகவும், அவற்றில் ஒன்றைத்தான் சுட்டுவீழ்த்தியதாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது

இச் செய்திபற்றி, ஐ.அ.கு. விடமிருந்து எவ்வித ஊர்ஜிதமும் இதுவரை கிடைக்கவில்லை.

# இந்தோனேஷிய மந்திரிசபையில் பல புதிய மாற்றங்கள்

## ஜெனரல் சுஹார்டோ அறிவிப்பு

ஜாகர்த்தா, ஒக். 12

இந்தோனேஷிய மந்திரி சபையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய ஜனாதிபதி ஜெனரல் சுஹார்டோ அறிவித்துள்ளார்.

கடந்த வருடம், முன்னுள் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகார்ணேவிடமிருந்து முக்கிய அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டபின், தமதுமந்திரிசபையில் ஜெனரல் சுஹார்டோ மாற்றங்கள் செய்வது, இதுவே முதற் தடவையாகும்.

இந்த மாற்றங்களினுல், முக்கிய மந்திரிகள் பாதிக்கப்படவில்லை. டாக்டர் ஆதாம் மாலிக், தொடர்ந்து வெளியுறவு விவகாரங்களுக்குப் பொறுப்பாகவுள்ளார்.

**கல்விமந்திரி பதவிநீக்கம்**

பதவிநீக்கம் செய்யப்பட்டசில மந்திரிகளில், கல்விமந்திரியும் ஒருவராவார். அவர் சுஹர்ணே ஆதரவாளரென்றும், அவரைப் பதவியிலிருந்து விலக்கவேண்டுமென்றும் இந்தோனேஷிய மாணவர்கள்வற்புறுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "சம்பள உயர்வை உடன் வழங்குக"

சுழிபுரம், புதன்

அகில இலங்கை அரசினர் தேசிய மருந்துக் கலவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையினர், சிங்களப் பரீட்சையில் தாம் சித்தியடையவில்லை என்ற காரணத்துக்காக நிறுத்தப்பட்ட சம்பள உயர்வை தொடர்ந்து அமுல் நடத்தாதது பற்றி நடவடிக்கை எடுக்குமாறு ஒரு கோரிக்கையை சுகாதார அமைச்சருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

# இந்தியா-பாகிஸ்தான் தந்தி தொடர்புகள்

## மீண்டும் ஆரம்பிக்கமுடிவு

கராச்சி, ஒக். 12

இந்தியாவும் பாகிஸ்தானும், தமது தந்தி தொலைபேசித் தொடர்புகளை மீண்டும் புதுப்பிப்பது என ஒப்புக்கொண்டுள்ளன.

இத்தொடர்புகள், இரண்டு வருடங்களுக்கு முன், இரு நாடுகளுக்குமிடையே போர் ஏற்பட்டபோது துண்டிக்கப்பட்டன.

மீண்டும் இத்தொடர்புகளை வைத்துக்கொள்வது என்ற முடிவு, இரண்டு நாடுகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்களின் 2 நாள் பேச்சுவார்த்தைகளின் முடிவில், நேற்றுக் கராச்சியில் அறிவிக்கப்பட்டது.

இத்தந்தி தொலைபேசித் தொடர்புகள், அடுத்த மாதம் முதற்திகதியிலிருந்து ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

# இந்திய சோஷலிச தலைவர் டாக்டர் லோஹியா காலமானர்

## நாடு வெறிச்சென்றிருக்கும் என்கிருர் இந்திய ராஷ்டிரபதி

புதுடில்லி, ஒக்.12

இந்திய சோஷலிசத் தலைவரான டாக்டர் ராம் மனேஹர் லோஹியா, இன்று அதிகாலையில், இங்குள்ள தனியார் நர்ஸிங் இல்லமொன்றில் காலமானுர்.

கடந்தசில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த டாக்டர் லோஹியா, இரு தினங்களாக மிகவும்கவலைக்கிடமான உடல் நிலையில் இருந்தார். இந்திய வெளிநாட்டு டாக்டர்களின் கோஷ்டி ஒன்று, டாக்டர் லோஹியாவுக்குச் சிகிச்சை அளித்து வந்தது.

**'ஈடுசெய்ய முடியாத இழப்பு'**

டாக்டர் லோஹியாவின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாப செய்தியொன்றில், 'ஈடு செய்ய முடியாத இழப்பு' நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. புரட்சியாளராகத் திகழ்ந்த லோஹியா இல்லாமல், நாடு வெறிச்சென்று இருக்கும்' என்று இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் தெரிவித்துள்ளார்.

'டாக்டர் லோஹியா, உணர்ச்சிமிக்க சேவையாளர்; தலைசிறந்த லட்சியவாதி' என்று இந்தியதுணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

'உச்சக்கட்டத்தை இன்னும் அடையாத அபூர்வமான ஒரு வாழ்க்கையை மரணம்துண்டித்துவிட்டது டாக்டர் லோஹியா, இந்திய சோஷலிஸத்தின் தந்தைகளில் ஒருவராவர்' என்று சோஷலிஸ, சர்வோதயத் தலைவரான டாக்டர் ஜெயப் பிரகாஷ் நாராயண் குறிப்பிட்டுள்ளார்.

'அரசியல் வானில் பிரகாசித்த ஒரு தலைவரை இந்தியா இழந்துவிட்டது. தமது ஆதரவாளர்களின் விசுவாசத்தை மட்டுமன்றி, அவர்களது அன்பையும் [illegible] வர் குறிப்பி[illegible] வர்' என்று, முன்னுள் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்

டாக்டர் லோஹியாவின் மறைவு, தமக்கு ஏற்பட்ட ஒரு சொந்த இழப்பென கேரள முதன்மந்திரி திரு. நம்பூதிரிபாத் கூறினுர்.

**பிரம்மச்சாரி**

சமூகத்தில் வசதியற்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாக இருப்போரின் மேம்பாட்டுக்காகப் போராடிய டாக்டர் லோஹியாவுக்கு வயது 57 ஆகும். அவர் ஒரு பிரம்மச்சாரி.

# தென் அரபிய தேசிய கட்சிகள்

## கெயிரோவில் பேச்சுவார்த்தை

கெயிரோ, ஒக். 12

தென் அரபிய சமஷ்டியின் இரு தேசிய அரசியற் கட்சிகளான தேசிய விடுதலை முன்னணியும், புளொஸியும் உத்தியோகபூர்வமான பேச்சு வார்த்தைகளை இங்கு ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் அரபிய சமஷ்டியில், தேசிய அரசாங்கம் [illegible] திக்கும்.

# ஆப்கானிஸ்தான்மந்திரிசபை ராஜினுமா சமர்ப்பித்தது

கபுல், ஒக். 12

திரு. முகம்மதுஹஷீம் மல்வன்லால் தலைமையிலான ஆப்கானிஸ்தான் மந்திரிசபை, ராஜினுமா சமர்ப்பித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மன்னர், மந்திரி சபையின் ராஜினுமாவை ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மந்திரிசபையொன்றை உருவாக்கும் வரை, பிரதம மந்திரியின் அதிகாரங்களை, ராஜாங்க மந்திரியிடம் மன்னர் ஒப்படைத்துள்ளார்.

# ஆர்ஜெண்டீனுவில் வெள்ளம்

## 20 பேர் பலி

பியூனெஸ் ஏரெஸ், ஒக்.12

ஆர்ஜெண்டீனுவில் ஏற்பட்ட வெள்ளத்தில் 20பேர் உயிரிழந்தனர்.

சுமார் 20,000பேர், தமது இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

# தற்காலிக பொலிஸ் நிலையம் அகற்றப்பட்டது

உடுப்பிட்டி, வியாழன்

கரணவாய், புருப்பொறுக்கிப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்துவந்த கலவரங்களைத் தொடர்ந்து நிலைமை மோசமடையாமல் தடுக்கும் பொருட்டுப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தினுல் குஞ்சர்கடை என்னுமிடத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்டிருந்த பொலிஸ் நிலையம் கடந்த 4 வாரங்களின்பின்னர் சனிக்கிழமையுடன் மூடப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருதரப்பினரிடையே ஏற்பட்ட மோதல்களை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் சமரசமகாநாடு மூலம் சமாதானமாகத் தீர்த்து வைத்ததைத் தொடர்ந்து இங்கு அமைதி நிலவுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கட்டுமரத்தின் மேல் ஒருவர் உயிருக்குப் போராட கடற்படையினர் விட்டுச் சென்றனராம்

— நமது வல்வெட்டித்துறை நிருபர் —

வல்வெட்டித்துறை, வியா.

உயிர் போகும் தறுவாயில் கட்டுமரத்தின் மேல் படுத்திருந்து கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்த சம்பவத்தை அவ்வழியால் சென்ற மூன்று கடற்படை வள்ளங்களும் வேண்டா வெறுப்புடன் கைவிட்டுச் சென்ற சம்பவமொன்று நேற்று இன்பருட்டி கடற்கரையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமனாற்றைச் சேர்ந்த கடற்தொழிலாளியான ஏ. பொன்னுச்சாமி என்பவர் இதுசம்பந்தமாக நமது நிருபரிடம் தெரிவிக்கையில் தனது இயந்திர வள்ளமொன்றில் தாம் மீன்பிடிக்கச் சென்ற சமயம் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு கடலுள் அள்ளுண்டு இன்பருட்டி கடற்கரைப்பக்கமாகச் சென்றதாகவும் தம்மால் ஆன முயற்சிகள் எடுத்தும் கட்டுமரத்தை இயங்கச் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும் அதனல் பல மணிநேரமாக கடலல் உயிருக்குப் போராடிய நிலையில் இருந்த தம்மை அவ்வழியால் வந்து கொண்டிருந்த மூன்று கடற்படை வள்ளங்களில் ஒன்றுதானும் தமது நிலமையை அறிந்தபின்னும் காப்பாற்ருது கட்டுமரத்தில் இருந்த மீன்களில் சிலவற்றை எடுத்துக் கொண்டு தம்மை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றதாகவும் கூறினர். இதனல் தாம் அவ்விடத்தில் பல மணிநேரமாக கட்டுமரத்தை இறுக்கப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையிலிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாமையால் மனைவி, மக்கள், உற்ருர் எல்லோரும் கவலையாகவே வீட்டில் இருந்தனராம். உறவினர்கள் அவரைப்பலமணி நேரமாக வள்ளங்கள்மூலம் தேடுதல் செய்தனராம். இவர் திரும்பிவராததை யிட்டு கிராமசேவகர் திரு. வி. ஜெயவீரசிங்கத்திற்கும் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினத்திற்கும் அறிவிக்கப்பட்டதாம் இவர் பல மணிநேர தேடுதலின்பின் கண்டுபிடிக்கப்பட்டு அறிவற்ற நிலையில் வீடு கொண்டுவந்து சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரின் இச் செயல்பற்றி அவர் பருத்தித்துறை எம். பி.யிடம் புகார் செய்துள்ளார்.

## எதிர்க்கட்சி எம். பி.களிடம் முறையீடு

சங்கானை, வியாழன்

அண்மையில் சங்கானை நிச்சாமம்] என்னு மிடத்தில் தாழ்த்தப்பட்டோர் குறைகளை ஆராய்வதற்கு விஜயம் செய்த கூட்டரசாங்க எம். பி.க்களான திருவாளர்கள் பீட்டர் கெனமன், ரி. பி. சுபசிங்கா, லெஸ்லி குணவர்த்தன ஆகியோரிடம் தங்கள் குறைகளை முறையிட்ட சங்கானைப் பட்டின சபை முன்னுள் அங்கத்தவர் நாகலிங்கம் தாங்கள் சீவல் தொழில் செய்யும் பனை ஒன்றில் கட்டப்பட்ட முட்டிகளில் உள்ளகள்ளில் பொலிடோல்ஊற்றியிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

## இலவச படக் காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி வடக்கு கலா சேவா சனசமூக நிலயத்தில் இலங்கை அரசாங்க தகவல் பகுதியினரால் இன்று மாலை 6-30 மணிக்கு இலவச படக்காட்சி காண்பிக்கப்படும்.

## அன்னதான தடை வழக்கு

வல்வெட்டித்துறை, வியா.

துன்னலை வடக்கைச் சேர்ந்த வ. நடராசா, இ. சுப்பிரமணியம், சி. காசிப்பிள்ளை, மு. கணபதிப்பிள்ளை ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த வை. கதிரித்தம்பி என்பவரை இவ்வருடம் ஆடி மாதம் 28-ந் திகதி துன்னலை கோவில் கடவைப் பிள்ளையார் கோவிலில் அன்னதானம் கொடுக்க விடாது தடுத்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் எதிரிகள் ஒவ்வொருவரையும் 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## ரூ. 2 லட்சம் ஒதுக்க கோரிக்கை

அச்சுவேலி, வியாழன்

அச்சுவேலிக் கிராமசபையின் மாதாந்தக்கூட்டம் சபைத் தலைவர் திரு. எஸ். ரி. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பஸ் நிலயம், நவீன சந்தை, மின் விஸ்தரிப்பு ஆகியவற்றை நவீன முறையில் சீர்திருத்தி அமைக்க இரண்டு இலட்சம் ரூபா மத்திய அரசாங்கத்திடம் இருந்து ஒதுக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 13-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் விரும்பியவை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை.

இரவு 6-15 பஜனை — வடகொழும்பு இந்து வாலிபர்சங்கம், 6-45 கிராமசஞ்சிகை — சேமிப்புச் சித்திரம், 7-15 பவளம், 7-30 பாட்டு — திருமதி விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 [illegible] உரைச் [illegible] 9-45 தலைச் [illegible] 10-15 தொடர்ந்த இசை.

## நமது சமையல் கலை பற்றி உடுப்பிட்டி எம். பி.

இமையாணன், வியா.

''காலையிலும், மாலையிலும் பாண் சாப்பிடும் முறையில் இக்காலத்தில் நமது சமையற் கலை வளர்ந்துள்ளது'' இவ்வாறு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சரஸ்வதிபூசையின்போது உடுப்பிட்டி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் கூறினர்

வடபெரும்பாக வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலைமகள் விழாவில் அவர் மேலும் பேசியதாவது:

''மற்ற எந்தச் சமயத்திலும் இல்லாத முறையில் நமது சைவ சமயத்தில் 64 கலைகளும் அக்காலத்தில் சிறந்து விளங்கிற்று. ஆனல் இப்பொழுது மேற்கத்திய நாடுகளின் மோகத்தால் சமையற் கலைகள் போன்ற கலைகள் வளரவில்லை.

சினிமாக் கலை பணத்திற்காக உருவாகிறதே தவிர தமிழ்க் கலைகளை வளர்க்க வல்ல. இந்நிலை மாற வேண்டும். நம் புராதனக் கலைகள் மீண்டும் வளர வேண்டும். அவற்றை இப்படியான பாடசாலைகள் மூலமாகவும், இப்படியான விழாக்கள் மூலமாகவும் வளர்க்கவேண்டும்.

நமது சைவ சமய விழாக்களுக்குத் தனி மதிப்புண்டு. வாழ்க்கைக்கு உகந்த விழா நவராத்திரி விழா. நவராத்திரி விழாவில் நாம் கருதும் வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் சைவ சமயத்தவர்க்கு மாத்திரமன்றி எல்லா மக்களுக்கும் தேவையானது.

மாணவர்கள் கலைவாணியின் அருளைப்பெற்று எல்லாக் கலைகளும் நிறைந்தவர்களாகி, ஊருக்கு நன் மதிப்பைத் தேடிக்கொடுக்க வேண்டும்.''

தலைமை தாங்கிய திருமதி ஆர். ஆர். நவரத்தினம், ''போதனையிலும், சாதனையிலும் நம் சைவ சமயம் சிறந்தது'' என்று கூறினர்.

அன்பு மயமான செல்விகளாக வாழ்ந்து கல்லூரிக்குப் பெருமையைத் தேட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

செல்வி கணேசநாயகி கந்தையாவும் பேசினர்.


தீபாராதனை, நடனம், கும்மி, பாட்டுக்கள், கோலாட்டம் போன்ற பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## ''கனிஷ்ட பல்கலைக்கழகத்துக்கு வயதுக்கட்டுப்பாடு வேண்டாம்''

உடுப்பிட்டி, வியாழன்

''கல்வி உலகத்தவரனைவர்க்கும் பொதுவானது. இதனை வயதுக் கட்டுப்பாடு மூலமோ, வறுமை காரணமாகவோ எவராலும் தடுக்க முடியாது. கனிஷ்ட பல்கலைக்கழகங்களை மாகாணங்கள்தோறும் நிறுவுவதால் மாணவர்கள் அதிக பயன் பெற முடியும். தொழில் வளர்ச்சியில் சிறந்த கல்வியையும் பெறலாம். ஆனல் அரசாங்கம் கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் சேர விரும்பும் மாணவர்கட்கு வயதுக் கட்டுப்பாட்டை விதித்துள்ளது பெரும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது. தகுதியும் திறமையும் இருந்தும் எத்தனையோ மாணவர்களுக்கு அரசாங்கம் விதித்த வயதெல்லை பெரும் இடையூறாக உள்ளது.''

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு விஞேபா இளைஞர் விவசாயக் கழகத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பேசுகையில் கழகச் செயலாளர் திரு சு விநாயகமூர்த்தி கூறினர். இக்கூட்டம் திரு. ச. நடராசா தலைமையில் நடைபெற்றது. கனிஷ்டபல்கலைக்கழகப் பிரவேச வயதுக் கட்டுப்பாட்டை உடனடியாக ரத்து செய்யுமாறு தேசிய உயர்கல்விச்சபைக்கு அவசர கோரிக்கை அனுப்புவதெனவும் இதற்கான முயற்சியில் துரித நடவடிக்கை எடுத்துவரும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி.க்கு நன்றி தெரிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய்

## கிறிஸ்ரியன் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 'பி' டிவிஷன் போட்டியில் கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி 2-1 கோல்களால் வசாவிளானைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## தண்ணீரூற்று வென்றது

முல்லைத்தீவு, வியாழன் முல்லைத்தீவு சந்திரன் விளையாட்டுக் கழகத்துக்கும் தண்ணீரூற்று சனசமூக நிலையத்துக்கும் இடையில் உதைபந்தாட்டம் ஆரம்பமாகிய 15 நிமிடத்தில் தண்ணீரூற்று சனசமூகநிலையத்தினர் முதலாவது கோலைப் போட்டனர். இடைவேளையின் பின்னர் இரண்டாவது கோலைப் போட்டனர். சந்திரன் விளையாட்டுக் கழகத்தினர் உற்சாகத்துடன் விளையாடியபோதும் பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டனர். ஈற்றில் தண்ணீரூற்று சனசமூக நிலையத்தினர் 2 கோல்களால் வெற்றிபெற்றனர். மத்தியஸ்தராக திரு. என். நடராசா கடமையாற்றினர்.

## ஐக்கிய விளையாட்டு கழகம் வெற்றி

முல்லைத்தீவு, வியா. முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக கோஷ்டியினருக்கும் மாமூலை டைனமோ விளையாட்டுக்கழக கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் 4—0 கோல்களால் வெற்றிபெற்றனர்.

உதைபந்தாட்டம்

# யாழ். சென். பற்றிக்ஸிடம் கொழும்பு சன்றைஸ் தோற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு 'சன்றைஸ்' விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக்கோஷ்டிக்குமிடையில்நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் சென். பற்றிக்ஸ்கல்லூரி திறமையாக விளையாடி 2-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆயிரக்கணக்கான ரசிகர்களின் கரகோஷத்துடன் தொடங்கியது. ஆட்டம் தொடங்கி 15 நிமிடங்களின்பின் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பின்னணி வீரர் குறூசின் அடி எதிர்தரப்பினரின் கோலுக்குள் புகுந்தது. இதன்பின் ஆட்டம் மிக உச்சக்கட்டத்தை அடைந்தது. இடைவேளையின்போது சென். பற்றிக்ஸ்கல்லூரி ஒரு கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின்பின்சென் பற்றிக்ஸ் கல்லூரியினரின் விளையாட்டு மேலும் உச்சக் கட்டத்தை அடைந்தது. இச்சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் பின்னணி வீரர் லோறன்ஸ் இரண்டாவது கோலை மிக சாதுரியமாகத் தலையால் அடித்து கோலுககுள் நுழைத்தார்.

ஆட்டம் முடிவதற்குப் பத்து நிமிடங்கள் இருக்கும்போது, கொழும்பு சன்றைஸ் கோஷ்டியினர் மிக வேகமாக விளையாடி சென். பற்றிக்ஸ் கோஷ்டியினரைத் திணறடிக்கச்செய்து ஒரு கோலைப் பெற்றனர். ஆட்டம் முடியும்போது சென். பற்றிக்ஸ் கல்லூரி 2—1 கோல்களால், கொழும்பு சன்றைஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. ஏகாம்பரம்மத்தியஸ்தம் வகித்தார். [வி. நி]

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

சுழிபுரம், வியாழன் வலிகாமம் மேற்கு விளையாட்டுக் கழக இரண்டாம் பிரிவினர், சங்கிலியன் வெற்றிக் கிண்ணத்துக்காக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தவிருக்கின்றனர். இப்போட்டியில் அராலி, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், மூளாய், தொல்புரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளவிருக்கின்றன.

கோப்பாய்

# குளத்தில் சிறுவன் இறந்து கிடந்தான்

யாழ்ப்பாணம், வெள்ளி காலையில் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்ற பன்னிரண்டு வயதுச்சிறுவன்ஒருவன் குளத்தில் இறந்துகிடக்கக் காணப்பட்டான். இப்பரிதாப சம்பவம் கோப்பாய் தெற்கில் நடைபெற்றது.

மரணமான வைரமுத்து நடராஜா என்ற சிறுவனின் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார். மரணமானவர் காலையில் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்றதாகவும், மாலையில் அவரைக்காணவில்லையென்று தேடியபோது, வீட்டுக்கருகிலுள்ள குளக்கரையில் இறந்தவரது சாரம் இருந்ததென்றும் சந்தேகத்தின் பேரில் குளத்துள் இறங்கித் தேடியபோது குழியொன்றுக்குள் அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும்மரணவிசாரணையில்தெரிவிக்கப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பிரேதபரிசோதனைசெய்தார். மரணமானவரின் தகப்பனுரான வைரமுத்து, தாய்வள்ளிப்பிள்ளை, சின்னத்தம்பி ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி]

தீவுப்பகுதி

## வீட்டுத்தோட்ட போட்டிமுடிவுகள்

ஊர்காவற்றுறை, வியா. தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவுக்கான வீட்டுத்தோட்டப் போட்டியில் புங்குடுதீவைச் சேர்ந்த திரு. கா. வைரமுத்துவுக்கு முதற்பரிசு அளிக்கப்பட்டது.

புங்குடுதீவு திரு. பூதத்தம்பி ஆறுமுகம் நயினாதீவு திருமதிநல்லையா தங்கமுத்து ஆகியோருக்கும் பரிசுகள் அளிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பரிசுகளை வழங்கியதோடு, புங்குடுதீவு - நயினாதீவு விவசாய விசாலிப்பு சேவையாளர் திரு. த. பசுபதியின் சேவையை பாராட்டிப் பேசினார்.

## காரில் மோதுண்டு பெண் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி காங்கேசன்துறையைச் சேர்ந்த வயோதிபமாது ஒருவர் காருடன் மோதுண்டதால் மரணமானார். இச்சம்பவம் காங்கேசன்துறை கீரிமலை வீதியில் நடைபெற்றது.

இது சம்பந்தமாக திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர். மரணமான வேலன் வள்ளிப்பிள்ளை [70 வயது] என்பவர் சம்பவம் நடந்தபோது காங்கேசன்துறை கீரிமலை வீதியில் நடந்து சென்றதாகவும், திடீரென ரோட்டின் குறுக்கே கடந்தபோது முன்னல் வந்தகார் இவரை மோதியதாகவும் மரண விசாரணையில் சாட்சியமளித்தமேதர் தர்மலிங்கம்தெரிவித்தார்.

மரணமானவருக்கு இரண்டு காதுகளும் கேட்காதென்றும், முதலில் அவர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

சம்பந்தப்பட்ட கார்ச்சாரதியான கெங்காசுதன் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு மீண்டும் இம்மாதம் 16-ம் திகதி மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டார். [ந. நி]


3-வது குதூகல வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [வெள்ளவத்தை]

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிஷ்ணா [திருமலை]

தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிஷ்ருண பஞ்சு | இசை: எம். எஸ். விஸ்வநாதன்



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
தங்கை



நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - சாவித்திரி நடித்த
நவராத்திரி



மனோகரா
யாழ்ப்பாணம்
பிரதீப்குமார், கே. என். சிங், ஹெலன் முதலியோர் நடித்த
பாஸ்போர்ட் [Passport] ஹிந்தி



REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m. 9-45 p. m.
Jack Lemmon
Carol Lynley
in
Under The
Yum Yum Tree


## வரி விளம்பரம்

### தேவை


வெயிட்டர்
ஆங்கில அறிவுடன் நன்கு அனுபவமுள்ள ஹோட்டல் வெயிட்டர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். பாம் கோர்ட், 202, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2241

ராக்டர் சாரதி
ரெயிலர் ஓட்டக்கூடிய அனுபவமுள்ள ராக்டர் சாரதி உடன் தேவை. விபரங்கட்கு: சி. இராசேந்திரம், 74, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 2242

பாடகர்:
வாத்தியக்கோஷ்டிக்கு பக்திப்பாடல்களும், சினிமாப் பாடல்களும் பாடக் கூடிய பாடகர் தேவை. நேரில் வரவும். ஏ. ஐயாத்துரை, சந்தை வீதி, உடுப்பிட்டி. 2219

வீடு:
காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகளுக்கு இடையில் லேட், தண்ணீர் வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை விபரத்துடன் எழுதவும். எஸ். மாணிக்கவாசகர், சில்வா ஸ்ரோர்ஸ், வவுனியா. 2243


### விற்பனைக்கு


காணி:
ஆனையிறவுக்கு அண்மையிலுள்ள இயக்கச்சியில் 80 ஏக்கர்களைக் கொண்ட தென்னை, கஜு, நெல்காணி பகுதியாகவோ அல்லது ஒருமித்தோ விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ரி. வடிவுநாதன், பிரதிநிதி ஹவுஸ் அன் புறப்பட்டி டிரேட்ஸ் லிமிட்டெட் பூகன்ஸ், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2239

காணி:
ஆரியர்மடத்தடியில் மின்சார வசதிகளுடன் கூடிய 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. ப. நாகரட்னம், ஆரியர்மடம், பூனைக்கோட்டை. 2244


## பால்சங்க நிர்வாகிகள்

குரும்பசிட்டி, வியா. வலிகாமம் வடக்கு ஐக்கிய பால் சங்கத்தின் 7வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. கே. சிவசுப்பிரமணியம் மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். உடுவில் பால் சங்கமண்டபத்தில் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. திரு. மா. நடராசா காரியதரிசியாகவும் திரு. ஏ. இராசரத்தினம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது.

## முகாமையாளரை சந்திப்பர்

சுழிபுரம், வியாழன் சுழிபுரம் கிராமசபைப் பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் பஸ் சேவையின் சீர்கேடு சம்பந்தமாக வடபகுதி இ. போ. ச. முகாமையாளரைச் சந்திக்கவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

துறைமுக தேசியமய விவகாரம்

# எங்களிடம் அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை

## திருமலை எம். பி. கூறுகிறர்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்படுவது சம்பந்தமாக அரசாங்கம் தமிழரசுக்கட்சியுடனே தம்முடனே கலந்தாலோசிக்கவில்லையென்றும் அவ்விதம் கலந்தாலோசித்தால் தாம் இதுசம்பந்தமான விரிவான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியுமென்றும் திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா தெரிவித்துள்ளார்.

திருமலைதுறைமுகம்தேசியமயமாக்கப்படுவதுபற்றிதிருமலை எம். பி. யிடம் நமது நிருபர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமலைத் துறைமுகத்தில் கடமையாற்றிவரும் தொழிலாளரின் நலன்பேணிப்பாதுகாக்கப்படவேண்டு மென்பதுவே தமது நோக்கமென்றும் அவர் மேலும்கூறினர்.

துறைமுக கூட்டுத்தாபனத்தலைவர் திரு. அபயகுணவர்த்தன திருமலைக்கு சமீபத்தில் விஜயம்மேற்கொண்டதைத்தொடர்ந்து திருமலைத் துறைமுகதேசிய மய விவகாரம்சூடுபிடித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் எதிர்ககட்சித் தலைவர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்துக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர்களான திரு. ரி. பி. சுபசிங்கா, திரு. பீட்டர் கெனமன், திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் முஸ்லிம்களின் தற்போதைய நிலைமை பற்றிஆராய்ந்தனர். தாம் அவர்களது பிரச்னைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி தெரிவித்தனர்.

இவ்வட்டாரத்திலுள்ள ஒஸ்மானியா அரசினர் பாடசாலைக்கும் சென்ற எதிர்க்கட்சித் தலைவர்கள், கல்லூரியின் தரத்தை உயர்த்தவும் முயற்சிமேற்கொள்வதாகவும் உறுதி கூறினர். இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி தேநீர் விருந்தொன்றளித்தது.

# "இதற்கொரு எல்லையில்லையா?"

## பண்டிதர் கேட்கிறர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"கிளிநொச்சி பகுதியில் தொடர்பாகவும், அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்துடனும் வாழும் நாடற்ரோர் பொலிஸாரால் தேவையற்ற சோதனைக்குள்ளாககப்படுவதுடன் படுமோசமாக இம்சிக்கப் படுகிறர்கள். இதற்கு ஒரு எல்லையில்லையா?" என்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு பொலிஸ் அதிகாரி திரு. லயனல் சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

"போதிய ஆராய்வும், சான்றுமில்லாமல் இவர்கள் தொல்லைப் படுத்தப்படுவதால் இம்மக்களில் உழைப்பும், உணவுற்பத்தியும் பாதிக்கப்படுகிறது" என்று அக்கடிதத்தில் மேலும்குறிப்பிட்டுள்ளார்.

# தற்கொலை

## கழுத்தில் சுருக்கிட்டு

சாவகச்சேரி, வியா.

கடன்தொல்லை, நோய் காரணமாக ஆறு பிள்ளைகளின் தந்தையான கே. கிருஷ்ணசாமி [55 வயது] என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் அரை மைல் தொலைவிலுள்ள ஆலயமொன்றிற்கு அண்மையிலுள்ள மரமொன்றில் இறந்த நிலையில் தொங்கிக் கொண்டிருந்த இவரின் மரணம் குறித்து இப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் ஸ்தலத்தில் மரண விசாரணை நடாத்தினுர்.

இறந்தவர் சாவகச்சேரியில் காப்பு வியாபாரம் செய்பவரேன்றும், யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதியில் அவரது வீடு உண்டென்றும், கடனும் நோயும் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டதாகவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்படடது. தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# மலேரியா தடுப்பு மகாநாடு

## பிரதமா தலைமையில் நடந்தது

கொழும்பு, வியாழன்

நாட்டின் சில பகுதிகளில் பரவி வரும் மலேரியா நோய் சம்பத்தமாக இன்று காலை கொழும்பில் பிரதமர் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர்கள் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். வேறு நாட்டைச் சேர்ந்த கடத்தலிலீடுபடும் சில 'பேர்வழி'களால்தான் இந்த மலேரியா நோய் இங்குபரவிவருவதாக அபிப்பிராயம்தெரிவிக்கப்பட்டது உடனடியாக மலேரியா நோயைத் தடுநபதற்காக நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளிடம் பிரதமர் தெரிவித்தார்.

# புதிய கட்டிட திறப்பு விழா

தாளையடி, வியாழன்

செம்பியன்பற்றுக் கிராம சபைப் புதிய அலுவலகக் கட்டிடத்தை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் திறந்துவைத்தார். இதனைத்தொடர்ந்து கி. ச. தலைவர் திரு. ஆ. ஐயம்பிள்ளை தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

# வெடி மருந்துகள் கண்டுபிடிப்பு

சங்கானை, வியாழன்

சங்கானைப் பொலீசார் வீடொன்றில் சோதனையிட்டு அபாயகரமான வெடி மருந்துவகைகளையும், வெடிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதுசம்பந்தமாக ப. பொன்னன் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

# லண்டன் ஆஸ்பத்திரியில் சௌந்தரநாயகம்

லண்டன், அக். 12

சர்வதேச புகழ்பெற்ற இலங்கையரான திரு. எமில் சௌந்தரநாயகம், லண்டன் ஆஸ்பத்திரியொன்றில் திடீர் இருதயநோய் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பார்ப்பதற்கு நிருபர்கள் உட்பட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

# யாழ்ப்பாண......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றகிராம அபிவிருத்தி, சிரமதான வேலைகள் சம்பந்தமானவருடாந்த மகாநாட்டிலேயே இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காரியாதிகாரிகள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள் அனைவரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

கடந்தவருடம் ஜூன் மாதம் முதல் இவ்வருடம் ஆகஸ்ட்மாதம் வரை யாழ். மாவட்டத்தைச்சேர்த்த 12 காரியாதிகாரி பிரிவிலும் செய்யப்பட்ட இச் சிரமதான வேலைகளினதும் பெறுமதி இலங்கையின் சகல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட சிரமதான வேலைகளிலும் பார்க்க முதலாவது இடம் வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலிகண்டி, கரவெட்டி, மாரீசன்கூடல், வரணி, மீசாலை, கோப்பாய், உரும்பராய், வட்டுக்கோட்டை, பெருங்காடு ஆகிய இடங்களில் மாத்திரம் அரசாங்கத்திடமிருந்து மானியம் எதுவும் பெருது பல வீதிகள் சிரமதானமூலம் செப்பனிடப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட சிரமதான பிரதம அமைப்பாளர் திரு. கே.பாலசுந்தரம் இம் மகாநாட்டில் சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாவாந்துறை, காலாவலை ஆகிய இடங்களிலுள்ள கடல், சிரமதான மூலம் ஆழமாக்கப்பட்டதாகவும், பல சுடலைகளும் பொது இடங்களும் துப்புரவு பண்ணப்பட்டதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ந.நி.]

# பெண் வர்க்கம்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கள் உண்டென்றும், தினமும் மதுபானம் அருந்துவதால் கடன் அதிகமாக அவருக்கு இருந்ததென்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்னர் 'தற்கொலை' எனத்தீர்ப்பளிக்கப் பட்டது. [ந. நி.]

# தாம் விரும்பிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்காங்கிரஸ், தமிழரசுக் கட்சிபிரமுகர்களுடன்தனித் தனியாக பேச்சுவார்த்தைகள்நடத்தியதாகவும், தனது கல்விப்பகுதி உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் இறுதி அறிக்கை கல்வி அமைச்சு காரியாலயத்துக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் அறியப் படுகிறது.

கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ள திட்டம்பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதுவித தகவல்களும் கொடுக்கக்கூடாதெனவும் யாழ். வித்தியாதிபதியின் மகாநாட்டில் இரகசியசத்தியப் பிரமாணம் எடுக்கப் பட்டதாகவும் தெரியவருகிறது.

இப்புதிய திட்டம் மந்திரி சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டால் 1968-ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் செயல்படுத்தப்படும்.

# "இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயல்கின்றனர்"

## பீட்டர் கெனமன் குற்றச்சாட்டு

குரும்பசிட்டி, வியா.

"தென்னிலங்கையில் நடைபெற்று முடிந்த உப தேர்தல்கள் மூலம் சிங்கள மக்களில் பெரும்பாலோர் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதை அறியலாம். தேசிய அரசாங்கம் கவிழ்ந்துவிடும் நிலையில் இருக்கின்றது. இதனுல் 10 வருடகாலம் பாராளுமன்றத்தைக் கலைக்காது ஆட்சியை நீடிக்க விரும்புகின்றனர். சில பிற்போக்குவாதிகள் பல நாடுகளிலும் கையாண்டு வெற்றி கண்டமாதிரி இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க, சிங்கள-தமிழ் முற்போக்குச் சக்திகள் ஒத்துழைத்து ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போராடவேண்டும்." இவ்வாறு திரு. பீட்டர் கெனமன் எம். பி., கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க யாழ். பிரதேசக் கிளைப் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ் நடராசா தலைமையில் பிரதிநிதிகள் மகாநாடு நடைபெற்றது

திரு. கெனமன் மேலும் கூறியதாவது: "அரசாங்கம் ஸ்திரமில்லாத பலமில்லாத காரணத்தால் அவசரகாலச்சட்டத்தின்கீழ் ஆட்சி புரிகின்றது. எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இன, மொழி கலவரங்களின் அறிகுறி இல்லாதபோதிலும் அவசரகாலப் பிரகடனம் ஏற்பட்டுள்ளது. மக்களின் எந்தவொரு பிரச்னையையும் தீர்க்க அரசாங்கம் தவறிவிட்டது. பிரச்னைகள் மேலும் மோசமாகியுள்ளன. உணவுப் பொருள் தட்டுப்பாடு, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குக் கட்டுப்பாடு, விலைவாசி உயர்வுக் கஷ்டங்கள் மக்களை எதிர்நோக்கியுள்ளன. உணவு உற்பத்தி இயக்கம் மக்களை ஏமாற்றும் திட்டமாகும். ஏழை விவசாயிகளின்பங்கு இல்லாதது இதில் வெற்றிபெற முடியாது. உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளின் தலையீடுகள் இருக்கின்றன. விவசாய நிலம், வாகன உபகரணங்கள் பெருமளவில் முதலாளிகளுக்கு வழங்கப்படுகின்றன வெளிநாட்டில் அரிசிப் பற்ருக்குறை நிலவுவதென்பது பொய். நிதி நெருக்கடி எனக் கூறுவோர் மாலைதீவு அரசுக்கு கடனுதவி அளிக்கின்றனர். அரசியல் துறையில் நமது பிரதமர் மிகப் பெரிய பொய்யர்."

# தேசீய சுவீப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 07 A 0660 | 49 V 0538 |
| 31 L 0507 | 05 A 0585 |
| 49 C 0184 | 49 E 0028 |
| 04 Q 0917 | 20 M 0790 |
| 48 P 0128 | 28 O 0784 |
| 01 C 0017 | 36 B 0530 |
| 36 U 0501 | 22 O 0731 |
| 30 X 0901 | 56 O 0693 |
| 28 M 0085 | 35 C 0382 |
| 43 O 0835 | 31 R 0382 |
| 09 P 0905 | 32 O 0902 |
| 38 A 0188 | 36 C 0544 |
| 34 C 0371 | 27 N 0512 |
| 29 A 0333 | 31 K 0446 |
| 50 S 0192 | 43 Y 0697 |
| 10 C 0543 | 34 S 0536 |
| 39 Y 0508 | 20 X 0156 |
| 20 G 0974 | 12 K 0724 |
| 46 W 0264 | 01 G 0349 |
| 35 U 0815 | 48 V 0456 |
| 38 J 0213 | 23 O 0164 |
| 38 C 0442 | 08 A 0921 |
| 30 K 0446 | 38 A 0538 |
| 24 P 0538 | 35 P 0312 |
| 52 G 0700 | 29 G 0335 |
| 41 X 0293 | 17 V 0743 |
| 40 C 0546 | 49 F 0744 |
| 05 U 0330 | 22 [illegible] 0108 |
| 05 A 0511 | 39 A 0564 |
| 01 O 0512 | 03 O 0237 |
| 57 W 0078 | 06 H 0768 |
| 40 G 0265 | 14 T 0355 |
| 16 G 0012 | 25 R 0798 |
| 04 O 0547 | 06 S 0088 |
| 40 E 0483 | 20 B 0391 |
| 61 S 0200 | 14 S 0677 |
| 57 X 0520 | 09 G 0792 |
| 04 K 0490 | 42 F 0250 |
| 31 X 0667 | 09 L 0768 |
| 51 E 0818 | 06 T 0213 |
| 05 Q 0181 | 61 H 0041 |
| 01 F 0555 | 32 H 0180 |
| 16 S 0990 | 24 B 0852 |
| 14 P 0024 | 18 D 0842 |
| 37 P 0832 | 07 O 0426 |

[இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை]

# புதிய மருந்து விநியோகநிலையம்

## ரூபா 1 லட்சம் செலவில்

கொழும்பு, வியா.

கொழும்பிலுள்ள சிறுவர்களுக்கான லேடி றிஜ்வே ஆஸ்பஸ்திரியில் புதிய வெளிநோயாளர்களுக்கான மருந்து விநியோக நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் செலவில் இக் கூட்டம் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்பப்பட்டது.

# லண்டன் செல்லும் இலங்கை வழக்கறிஞர்

லண்டன், ஒக். 12

இலங்கை உட்பட 17நாடுகளைச் சேர்ந்த 20 அரசாங்க வழக்கறிஞர்கள் அடுத்த வாரம் லண்டன் விஜயம் செய்யவிருக்கிறர்கள். லண்டனில் நடைபெறவிருக்கும் ஐந்துமாதப் பயிற்சி வகுப்புகளில் இவர்க்ள் பங்குபற்றுவார்கள். முன்னேறி வரும் நாடுகளைஎதிர்நோக்கும் சட்டப்பிரச்னைகள், சர்வதேச சட்டம், சாம்ராஜ்ய சட்டம், விண்வெளிச் சட்டம், சட்டத்தயாரிப்பு ஆகியவிவகாரங்கள் சம்பந்தமாக இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு இந்தப் பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்துள்ளது.

இலங்கைப் பிரதிநிதியாக இந்தப் பயிற்சி வகுப்புகளில் வழக்கறிஞர் திரு. ஜி. ஏ. தவராசா கலந்துகொள்வார். இவர் ஓர் அரசாங்க உதவிச்சட்ட தயாரிப்பாளராவார்.

# நவராத்திரி விழா

அராலி, வியா.

அராலி தெற்கு அகாலக் குளபிள்ளையார் கோவிலில் நேற்று இரவு நவராத்திரி விழா சைவ இளைஞர் மன்றத்தினரால் கொண்டாடப்பட்டது. மன்றத் தலைவர் திரு. க. சின்னத்துரையின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாணவர் பக்திப் பாடல், கதாகாலட்சேஷபம் முதலியன இடம் பெற்றன.

அராலிதெற்கு சனசமூக நிலைய உறுப்பினர் வழக்கம் போல இவ்வாண்டும் நவராத்திரிவிழாவை நிலையத் தலைவர் திரு. வி. நாகலிங்கம் தலைமையில் கொண்டாடினர்.

★

உரும்பராய், வியா.

உருப்பராய் வடக்கு சனசமூக நிலையத்தில் சரஸ்வதி பூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டது. பண்டிதர் இ. நவரத்தினம், கலைமகள் பெருமையைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டேபர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org